தினமணி

## பயிர் காப்டு தொகையை அரசே செலுத்தும்: புதுவை முதல்வர் தகவல்

First Published : 20 Feb 2010 12:00:00 AM IST

புதுச்சேரி, பிப். 19 : புதுச்சேரியில் அடுத்த ஆண்டு முதல் பயிர் காப்ட்டுத் தொகை முழுவதையும் அரசே செலுத்தும் என்று முதல்வர் வி. வைத்திலிங்கம் தெரிவித்தார்.

புதுச்சேரி சட்டப்பேரவையில் ஆளுநர் உரை மீதான நன்றி தெரிவிப்பு தீர்மானத்துக்கு வெள்ளிக்கிழமை பதிலளித்து அவர் பேசியது:

புதுச்சேரியில் பயிர் காப்ட்டுத் திட்டம் அமல்படுத்தும்போது முழு தொகையையும் விவசாயிகளே செலுத்தினர். இது இந்த நிதியாண்டில் 50 சதவீத தொகை விவசாயிகள் சார்பிலும், 50 சதவீத தொகையை அரசு சார்பிலும் செலுத்தப்பட்டது.

வரும் நிதியாண்டிலிருந்து முழு தொகையும் அரசே செலுத்தும். இந்த நிதியாண்டில் இயற்கை சீற்றம் பெருமளவு இல்லாமல் போனது மகிழ்ச்சி அளிக்கிறது. கடந்த ஆண்டின் நெல் மானியத் தொகை அனைத்தும் வழங்கப்பட்டு விட்டது. இந்த ஆண்டு வழங்கப்பட வேண்டிய தொகை மட்டும் நிலுவையில் உள்ளது.

மின் உற்பத்தி 112 மெகாவாட்: எரிவாயு மூலம் காரைக்காலில் 38 மெகாவாட் மின்சாரம் கிடைத்து வருகிறது. தற்போது புவனகிரி, ஆழ்கடல் பகுதிகளில் கிடைக்கும் இயற்கை எரிவாயு மூலம் மின் உற்பத்தியின் அளவு 112 மெகாவாட்டாக உயரும் வாய்ப்பு உள்ளது என்றார் முதல்வர்.

## மூங்கில் சாகுபடிக்கு மானியம்: விவசாயிகளுக்கு அழைப்பு

First Published : 20 Feb 2010 07:24:09 AM IST

பொன்னமராவதி,பிப் 19: மூங்கில் சாகுபடிசெய்ய ஒரு ஹெக்டேருக்கு ரூ. 4 ஆயிரம் மானியமாக வழங்கப்படுகிறது; ஆர்முள்ள விவசாயிகள் தோட்டக்கலைத் துறையினரை அணுகலாம்.

இதுகுறித்து பொன்னமராவதி தோட்டக்கலைத் துறை உதவி இயக்குநர் எம். ஹெடிபாய் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பு:

""மூங்கில் ஒரு புல் வகையைச் சார்ந்ததாகும். நடவு நட்ட 6-ம் ஆண்டு முதல் 40-வது ஆண்டு வரை மகசூல் தரக்கூடியது. ஒரு நாளைக்கு ஓர் அடி முதல் ஒன்றரை அடி வரை மிக வேகமாக வளரக்கூடியது.

அதிக கார்பன் டை ஆக்ப்ஸடை எடுத்துக் கொண்டு பிராண வாயுவை வெளியிடக் கூடிய மூங்கில் ஏற்கெனவே காகித உற்பத்தியில் முக்கியப் பங்கு வகிக்கிறது. இப்போது சிறந்த எரி பொருளாகவும் பயன்படுகிறது. அனல் மின் நிலையங்களில் மின்சாரம் உற்பத்திக்குத் தற்போது நிலக்கரிக்குப் பதிலாக மூங்கிலைப் பயன்படுத்தத் தொடங்கியுள்ளனர்.

இத்தனை பயன் தரும் தன்மையுள்ள மூங்கில் சாகுபடிக்கு மத்திய அரசின் தேசிய மூங்கில் இயக்கத் திட்டத்தின் கீழ் தற்போது மானியம் வழங்கப்படுகிறது. ஒரு ஹெக்டேருக்கு ரூ. 4 ஆயிரம் என்று ஒரு விவசாயிக்கு அதிகபட்சம் 4 ஹெக்டேர் வரை மானியம் வழங்கப்படுகிறது.

தமிழகத்தில் மூங்கில் சாகுபடிக்கு பேம்பூலா பல்குவா,பேம்பூலா நீயூட்டனஸ்,பேம்பூலா டுல்டா மற்றும் பேம்பூலா வல்காரிஸ் ரகங்கள் சிறந்தவை என்று கண்டறியப்பட்டுள்ளது.

ஆகையால்,ஆர்வமுள்ள விவசாயிகள் தோட்டக்கலை உதவி இயக்குநர் அலுவலகத்தைத் தொடர்புகொண்டு பயனடையலாம்."

**இயற்கை வேளாண்மையே பட்டு வளர்ப்புக்கு உகந்தது**

First Published : 20 Feb 2010 07:23:47 AM IST

ஆலங்குடி, பிப். 19: இயற்கை வேளாண்மையே பட்டு வளர்ப்புக்கு உகந்தது என்றார் விஞ்ஞானி என்.ஜி. செல்வராஜ்.

ஆலங்குடி அருகேயுள்ள வம்பன் வேளாண் அறிவியல் நிலையத்தில் புதன்கிழமை நடைபெற்ற இயற்கைப் பட்டு வளர்ப்பு தொடர்பான பயிலரங்கில் சிறப்பு விருந்தினராகப் பங்கேற்ற அவர் பேசியது:

""பட்டு வளர்ப்பு என்பது பொருளாதார முக்கியத்துவம் வாய்ந்த தொழில் மட்டுமன்றி மனித நாகரீகத்தோடு இணைந்த கலாச்சாரமிக்க ஒரு தொழிலாகும்.

தமிழகத்தில் கிருஷ்ணகிரி, தர்மபுரி,வேலூர்,சேலம்,ஈரோடு மற்றும் கோவை உள்ளிட்ட மாவட்டங்களில் பட்டு உற்பத்தி அதிக அளவில் நடைபெறுகிறது. இவற்றுக்கு அடுத்த நிலையில், புதுக்கோட்டை மற்றும் சிவகங்கை மாவட்டங்களில் விவசாயிகள் பட்டு வளர்ப்பில் ஈடுபட்டுள்ளனர்.

இந்நிலையில், இங்குள்ள விவசாயிகள் மட்டுமின்றி பொதுவாகவே பட்டு வளர்ப்பில் ஈடுபட்டுள்ளவர்கள் பலரும் இப்போது எதிர்கொள்ளும் பெரிய பிரச்னை பட்டுப்புழுக்களின் அழிவேயாகும்.

இதற்கு முக்கியமான காரணம், ரசாயன உரம் மற்றும் பூச்சிக்கொல்லி மருந்துகளைப் பயன்படுத்துவதேயாகும்.

இதனால் விவசாயிகளுக்குப் பெரும் வருவாய் இழப்பு ஏற்படுவதுடன், மண் வளமும் பாதிக்கப்படுகிறது. இதைத் தடுக்க இயற்கை வேளாண்மையே சிறந்ததாகும். இதன் மூலம் பிரச்னையை எதிர்கொள்வதுடன் சுற்றுச்சூழலையும் பாதுகாக்க முடியும்.

பட்டு உற்பத்தியில் புதிய முறைகள் நிறைய இப்போது கையாளப்படுகின்றன. இவற்றை விவசாயிகள் அறிந்துகொள்ள வேண்டும். இந்தப் புதிய முறைகளைக் கையாளும் ஆர்வமுள்ள விவசாயிகளுக்கு வங்கியில் எளிய கடனுதவியும் அளிக்கப்படுகிறது'' என்றார் செல்வராஜ்.

பயிற்சிக்கு வேளாண் பல்கலைக்கழகத் தலைவர் ப. சின்னையன் தலைமை வகித்தார். தேசிய பயறுவகை ஆராய்ச்சி மையப் பேராசிரியர் விஜயராகவன் பயிற்சியைத் தொடக்கிவைத்தார்.

திருச்சி மண்டல பட்டுபுழுவியல் துறை இணை இயக்குநர் புருஷோத்தமதாஸ், சேலம் மண்டல பட்டு ஆராய்ச்சி மையத்தின் விஞ்ஞானி ரவி, பேராசிரியர் மகாலிங்கம் உள்ளிட்டோர் பேசினர்.

பயறு வகை ஆராய்ச்சி மையத் தலைவர் மெ. ராமசாமி பயிற்சியில் பங்கேற்ற விவசாயிகளுக்கு சான்றிதழ் வழங்கினார்.

பயிலரங்க ஏற்பாடுகளை பட்டுப் புழுவியல் துறை உதவிப் பேராசிரியர் கு.ஆ. முருகேஷ் செய்திருந்தார்.

**வெள்ளரி சாகுபடி பாதிப்பு**

First Published : 20 Feb 2010 07:23:33 AM IST

ஆலங்குடி, பிப். 19: பசுமையான ஆலங்குடி வெள்ளரி இந்தப் பருவத்தில் சோதனையை எதிர்நோக்கியுள்ளது. கூலி உயர்வு, தொழிலாளர் பற்றாக்குறையினால் ஆலங்குடி பகுதியில் வெள்ளரி சாகுபடி பெருமளவில் பாதிக்கப்பட்டுள்ளது.

தமிழகத்திலேயே அதிக அளவில் ஆழ்குழாய்க் கிணறுகளைக் கொண்டுள்ள பகுதி ஆலங்குடி பகுதிதான். ஒருபுறம், நிலத்தடி நீர்மட்டம் மிக மோசமான அளவுக்கு 400 அடி ஆழத்துக்குப் போய்விட்டாலும், மறுபுறம் பசுமையான காய், கனிகளைத் தரும் பூமி இது.

இங்கு விளையும் காய்கள் ஆகட்டும்; கனிகள் ஆகட்டும்; அவற்றின் ருசியே அலாதிதான்.

தை, ஆடிப் பட்டத்தில் ஏறத்தாழ 500 ஏக்கர் பரப்பளவில் இங்கு வெள்ளரி சாகுபடி நடைபெறும். இது ஒரு மாற்றுப் பயிராகவே இந்தப் பகுதியில் பயிரிடப்படுகிறது.

வெள்ளரித் தோட்டத்தில் விதை விதைத்தலில் தொடங்கி, சுமார் 20 நாள்களில் தொடங்கும் அறுவடையானது 3 மாதங்களில் முடிவடைகிறது. தினந்தோறும் அறுவடையாகும் வெள்ளரிக் காய்களை அவற்றின் பருமனுக்கேற்ப

சிறியது முதல் பெரியது வரை கிலோவுக்கு சுமார் ரூ. 14 முதல் ரூ. 1 வரை விலை நிர்ணயித்து, அந்தந்தப் பகுதியில் கொள்முதல் செய்கின்றனர்.

உணவுப் பொருளாக மட்டும் இன்றி மருந்துப் பொருளாகவும் வெள்ளரி பயன்படுத்தப்படுவதால், வெளிமாநிலங்களுக்கும் இங்கிருந்து வெள்ளரிக் காய்கள் அனுப்பப்படுகின்றன.

குறைந்த காலத்தில் ஏக்கருக்கு ரூ. 40 ஆயிரம் வருமானம் கிடைப்பதால், விவசாயிகள் ஆர்வத்துடன் வெள்ளரி சாகுபடியில் ஈடுபட்டு வந்தனர். இந்த வெள்ளரிக்கு சந்தையில் நல்ல மவுசு இருப்பதால், வியாபாரிகளும் வெளி மாநில நிறுவனங்களும் வெள்ளரி சாகுபடி மேற்கொள்ளப்படும் கிராமங்களில் விவசாயிகளுக்குத் தேவையான விதை, உரம், பூச்சிக்கொல்லி மருந்து உள்ளிட்ட வேளாண் இடுபொருள்கள் மற்றும் முன்பணம் வழங்கி வெள்ளரி சாகுபடிக்கு விவசாயிகளை ஊக்குவித்து வருகின்றனர்.

இந்நிலையில்,தொழிலாளர் பற்றாக்குறையும் விவசாயக் கூலி உயர்வும் நிகழாண்டில் வெள்ளரி சாகுபடியைப் பெருமளவில் பாதித்துள்ளது. முன்பு விவசாயத் தொழிலாளர்களுக்கு நாள் கூலியாக ரூ. 40 வழங்கப்பட்ட நிலையில், வேலை உறுதித் திட்டத்தின் எதிரொலியாக தற்போது கூலி ரூ. 100 ஆக உயர்ந்துள்ளது.

ஆனால், வெள்ளரி சாகுபடிக்கு இந்தக் கூலி கட்டுபடியாகவில்லை என்று நில உரிமையாளர்கள் கூறுகின்றனர். இவ்வளவு கூலி கொடுத்து வெள்ளரி சாகுபடி மேற்கொண்டால், அதற்கேற்ற விலை சந்தையில் கிடைப்பதில்லை; ஆகையால் நஷ்டத்தைச் சந்திக்க வேண்டியிருக்கிறது என்று அவர்கள் கூறுகின்றனர்.

இது ஒருபுறமிருக்க, ரூ. 100 கூலி கொடுத்தாலும், வேலை உறுதித் திட்டப் பணி இல்லாத நாள்களில் மட்டுமே தொழிலாளர்கள் வேலைக்கு வருகிறார்கள் என்ற குற்றச்சாட்டும் இன்னொருபுறம் கேட்கிறது.

இதனால், நிகழாண்டில் இப்பகுதியில் ஏறத்தாழ 80 சத அளவுக்கு வெள்ளரிச் சாகுபடி கடுமையாக பாதித்துள்ளது.

இதுகுறித்து இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் மாவட்டச் செயலர் எஸ். பி. முத்துக்குமரன் கூறியது:

""புதுக்கோட்டை மாவட்டம் வறண்ட பகுதி என்றாலும் விவசாயத்தில் பல்வேறு பிரச்னைகளையும் எதிர்கொண்டு பல்வேறு பயிர் சாகுபடியில் விவசாயிகள் ஈடுபட்டு வருகின்றனர். ஆனால், உற்பத்திப் பொருளுக்கு உரிய விலை கிடைக்காததால், விவசாயம் செய்தும் பலனில்லாமல் போகிறது.

விவசாயிகளுக்கான கூலி உயர்வு அல்லது தொழிலாளர் தட்டுப்பாடு போன்ற பிரச்னைகள் எல்லாவற்றுக்குமே ஒரே தீர்வுதான் உள்ளது. அது, விளைபொருளுக்கு நியாயமான விலை கிடைக்கவும் வேளாண் தொழிலை லாபரமான தொழிலாக மாற்றவும் அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்பதுதான் என்றார் அவர்.

### விவசாயிகளுக்கு விழிப்புணர்வுப் பயிற்சி

First Published : 20 Feb 2010 05:56:21 AM IST

விருதுநகர், பிப். 19: விருதுநகர் மாவட்ட விவசாயிகளுக்கு, நுகர்வோர் விழிப்புணர்வுக் குறித்த இரண்டாம் கட்டப் பயிற்சி வகுப்புகள் வியாழக்கிழமை நடைபெற்றது.

நிகழ்ச்சிக்கு விருதுநகர் மாவட்ட வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு அலுவலர் கே.கொம்பையன் தலைமை வகித்தார்.

இப் பயிற்சி வகுப்பில் விதைகள், இடு பொருள்கள், பூச்சிக் கொல்லி மருந்துகள், உரம் வாங்கும் போது அதற்கான ரசீது, சம்பந்தப்பட்ட பொருளின் ரகம், காலாவதியான தேதி, அந்தப் பொருளைப் பயன்படுத்தி பாதிப்பு ஏற்பட்டால், அது குறிதது நுகர்வோர் குறைதீர் மன்றத்தில் புகார் செய்தல், அது குறித்து வழங்கப்படும் தீர்ப்பு ஆகியன குறித்து விவசாயிகளுக்கு விருதுநகர் வேளாண்மை துணை இயக்குநர் கோ. ராமராஜ், வேளாண் அலுவலர் (விற்பனை) அய்யப்பன் ஆகியோர் விளக்கினர்.

நுகர்வோர் பாதுகாப்புச் சட்டம், உரிமைகள், கடமைகள், வேளாண்சார் நுகர்வோர் நீதிமன்ற வழக்குகள் மற்றும் தீர்ப்புகள் ஆகியன குறித்தும் சிவகாசி நுகர்வோர் பாதுகாப்புச் சேவை மையத் தலைவர் எஸ்.சுப்பிரமணியம் விளக்கினார்.

பயிற்சியின் முடிவில் மாவட்ட வழங்கல் அலுவலர் விவசாயிகளுக்கு சான்றிதழைகளை வழங்கினார்.

அடுத்த கட்டப் பயிற்சி வகுப்புகள் பிப்ரவரி 25-ம் தேதி ஆட்சியர் அலுவலகக் கூட்ட அரங்கில் நடைபெறவுள்ளது.

### நேரடி நெல் கொள்முதல் நிலையம் அமைக்க வலியுறுத்தல்

First Published : 20 Feb 2010 07:22:10 AM IST

அரியலூர், பிப். 19: அரியலூர் மாவட்டத்தின் கொள்ளிடக் கரையோர கிராமங்களில் நேரடி நெல் கொள்முதல் நிலையங்களை ஏற்படுத்த வேண்டும் என்று பல்வேறு விவசாயச் சங்கப் பிரதிநிதிகள் மாவட்ட ஆட்சியர் (பொறுப்பு) ரெ. பிச்சையிடம் வலியுறுத்தினர்.

அரியலூர் மாவட்ட விவசாயிகள் குறைதீர்க்கும் நாள் கூட்டம் வட்டாட்சியர் கூட்ட அரங்கில் வெள்ளிக்கிழமை நடைபெற்றது.

கூட்டத்தில் அரியலூர் மாவட்டத்தில் கொள்ளிடம் ஆறு செல்லும் ஏலாக்குறிச்சி, குருவாடி, தா. பழூர் ஆகிய ஒன்றியங்களில் உள்ள கிராமங்களில் நேரடி நெல் கொள்முதல் நிலையம் அமைக்க வேண்டும்.

மேலும், நெல் கொள்முதல் செய்யும் போது, ஒரு விவசாயிக்கு அதிகபட்சமாக ரூ. ஒரு லட்சம் வரையில்தான் நெல் கொள்முதல் செய்ய முடியும் என்ற கட்டுப்பாடுகளைத் தளர்த்த வேண்டும் என்று விவசாயச் சங்கப் பிரதிநிதிகள் இரா. செங்கமுத்து, க. அம்பேத்கர் வழியன், மாவட்ட காங்கிரஸ் முன்னாள் தலைவர் சீ. பாலகிருஷ்ணன் ஆகியோர் வலியுறுத்திப் பேசினர்.

அரியலூர் மாவட்ட ஆட்சியர் (பொறுப்பு) ரெ. பிச்சை பேசியது:

விவசாயிகளின் கோரிக்கையின்படி, அரியலூர் மாவட்டத்தில் நேரடி நெல் கொள்முதல் நிலையங்கள் அமைக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

இந்தக் கூட்டத்தில் அளிக்கப்பட்ட கோரிக்கை மனுக்களின் மீது சம்பந்தப்பட்ட அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டும். மேலும், அதற்கான பதிலை அடுத்து வருகிற கூட்டத்தில் தெரிவிக்க வேண்டும்.

அவ்வாறு நடவடிக்கை எடுக்காத அதிகாரிகளுக்கு ஷோ-காஸ் நோட்டீஸ் வழங்கப்படும் என்றார் அவர்.

கூட்டத்தில் வேளாண் இயக்குநர் கே.சிவக்குமார், கோட்டாட்சியர் ஆர். ஜீவரத்தினம், வேளாண் இணை இயக்குநர் சந்தானகிருஷ்ணன் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

### 24-ல் இலவச முயல் வளர்ப்பு பயிற்சி

First Published : 20 Feb 2010 12:38:52 AM IST

காஞ்சிபுரம், பிப். 19: ஏனாத்தூர் உழவர் பயிற்சி மையம் சார்பில் முயல் வளர்ப்பு குறித்த இலவச பயிற்சி இம்மாதம் 24-ம் தேதி நடைபெறுகிறது.

÷இது குறித்து இம் மையத்தில் தலைவர் ம.ந.சுந்தரராமன் வெளியிட்ட அறிக்கை: கால்நடை பண்ணை தொழில்களில் முயல் வளர்ப்பு மிகவும் லாபகரமான தொழிலாகும். முயல்கள், நார்ச்சத்து மிகுந்த தாவரங்களையும், வீட்டில் வீணாகும் காய்கறிகள் முதலியவற்றையும் உட்கொண்டு நல்ல தரமான புரதச்சத்து மிக்க இறைச்சியை அளிக்கின்றன.

÷குறைந்த இடத்தில் குறைந்த முதலீட்டில் எளிய பராமரிப்பில் முயல்களை வளர்க்கலாம். முயல் இறைச்சியில் கொழுப்புச்சத்து மிகக் குறைவாக உள்ளதால் ரத்தக் கொதிப்பு மற்றும் இதய நோய் உள்ளவர்களுக்கு ஏற்றது. இந்த இறைச்சிக்கு விற்பனை வாய்ப்பு அதிகம் உள்ளது.

÷பயிற்சியில் பங்கு பெற ஆர்வமுள்ளவர்கள் நேரிடையாகவோ அல்லது தொலைபேசி மூலமாகவோ தொடர்பு கொண்டு தங்கள் பெயரை பதிவு செய்து கொள்ளலாம். தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி:

÷பேராசிரியர் மற்றும் தலைவர், உழவர் பயிற்சி மையம், ஏனாத்தூர், காஞ்சிபுரம் - 631 561. தொலைபேசி எண்: 044-27264019.

**ரப்பர் விலை கிலோ ரூ. 134 ஆக உயர்வு**

First Published : 20 Feb 2010 01:25:11 AM IST

குலசேகரம், பிப். 19: கன்னியாகுமரி மாவட்டத்தில் ரப்பர் விலை தொடர்ச்சியாக உயர்ந்து கிலோ ரூ. 134- ஐ எட்டியுள்ளது.

இந்தியாவில் அதிகம் ரப்பர் உற்பத்தி செய்யப்படும் கேரளத்திலும், கன்னியாகுமரி மாவட்டத்திலும், தற்போது ரப்பர் மரங்களில் இலையுதிர்வு காரணமாக பால்வடிப்பு நிறுத்தப்பட்டுள்ளது. இதனால், ஏற்பட்டுள்ள உற்பத்திக் குறைவு காரணமாக விலை நாளுக்கு நாள் அதிகரித்து வருகிறது.

கடந்த மாதத்தில் அதிகபட்சமாக கிலோ ரூ. 129.50 ஆக இருந்த தரம் பிரிக்கப்படாத ரப்பரின் விலை படிப்படியாக உயர்ந்து வெள்ளிக்கிழமை கிலோ ரூ. 134.50 ஆக இருந்தது.

வெள்ளிக்கிழமை கோட்டயம் சந்தையில், ஆர்.எஸ்.எஸ். 4 தர ரப்பரின் விலை ரூ. 140 ஆகவும், ஆர்.எஸ்.எஸ். 5 தர ரப்பரின் விலை கிலோ ரூ. 137 ஆகவும் இருந்தது. சர்வதேச சந்தையான சிங்கப்பூர் சந்தையில் ஆர்.எஸ்.எஸ். 3 தர ரப்பரின் விலை கிலோ ரூ. 148.47 ஆகவும், ஆர்.எஸ்.எஸ். 4 தர ரப்பரின் விலை கிலோ ரூ. 147.41 ஆகவும் இருந்தது.

**மாவுப் பூச்சி மருந்து தெளிப்பு முகாம்**

First Published : 20 Feb 2010 01:02:03 AM IST

ராசிபுரம், பிப்.19: எலச்சிப்பாளையம் பகுதியில் விவசாய பயிர்களில் மாவுப்பூச்சி தாக்குதலை கட்டுப்படுத்தும் வழிமுறைகள் குறித்து வேளாண்மை அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

÷எலச்சிபாளையம் வட்டாரத்தில் தேசிய வேளாண்மை வளர்ச்சி திட்டத்தின்கீழ் மாவுப்பூச்சி மருந்து தெளிப்பு முகாம் எலச்சிப்பாளையம் ஊராட்சி ஒன்றியம் கொன்னையார் கிராமத்தில் வெள்ளிக்கிழமை நடைபெற்றது.

÷ஊராட்சி ஒன்றிய பெருந்தலைவர் கே.ராசு அவர்கள் தலைமை வகித்து தெளிப்பு முகாமை துவக்கி வைத்தார். வட்டார வேளாண்மை உதவி இயக்குநர் த.லோகநாதபிரகாசம் வரவேற்றார். இம்முகாமில் மாவுப்பூச்சி தாக்குதல் குறித்து தெரிவிக்கப்பட்ட வழிமுறைகள்:

÷மாவுப் பூச்சி தாக்குதல் முதலில் சில பகுதிகளில் பப்பாளி பயிரில் காணப்பட்டது. பின்னர் இப்பூச்சியானது மரவள்ளி, காட்டாமணக்கு, செம்பருத்தி, கொய்யா, தேக்கு, வெண்டை, கத்தரி, தக்காளி, பருத்தி போன்ற பயிர்களிலும் பாரித்தினியம் போன்ற பல களைச் செடிகளிலும் பரவியது. தற்போது மல்பெரி செடிகளையும் தாக்க துவங்கியுள்ளது.

பாதிக்கப்பட்ட இலை உருமாறி சிறுத்து காணப்படும். மாவுப்பூச்சிகள் தண்டுகள், இலைகளின் அடிப்பாகம் மற்றும் இலைக் காம்பு இடுக்குகளில் காணப்படும். மெழுகு போன்ற மெல்லிய வெள்ளை நிற உறை சூழ்ந்து காணப்படும். மாவுப் பூச்சிகள் வெளியேற்றும், தேனை உண்ண எறும்புகள் ஊர்ந்து செல்வதை காண முடியும். இலையின் மேற்பரப்பில் கரும்பூஞ்சானம் படர்ந்து காணப்படும்.

மாவுப் பூச்சியைக் கட்டுப்படுத்த முதலில் வயல்களை களையின்றி வைத்துக் கொள்ள வேண்டும். பாதிப்பு மிகக் குறைவாக இருந்தால் பாதிக்கப்பட்ட இலை தண்டுகளை பாலிதீன் பைகளில் சேகரித்து எரிக்கவும். பாதிப்பு அதிகமாக இருந்தால் ஒட்டு மொத்தமாக அடிவெட்டு செய்து செடிகளை தீயிட்டு அழிக்க வேண்டும்.

÷முதலில் 1 சதவிகிதம் அசாடிராக்டின் மருந்தை ஒரு லிட்டர் தண்ணீரில் 2 மில்லி வீதம் ஒரு ஏக்கருக்கு 200 லிட்டர் மருந்துக் கரைசல் தயார் செய்து கைத்தெளிப்பான் மூலமாக செடியின் அடிக்கட்டை தண்டு மற்றும் செடியை சுற்றியுள்ள மண் நன்கு நனையும்படி மருந்தடிக்க வேண்டும்.

மருந்துடன் ஒட்டும் திரவம் கண்டிப்பாக கலந்து தெளிக்க வேண்டும். முதல் தெளிப்பிலிருந்து 15 நாள் கழித்து ப்ரோஃபனோபஸ் 50 சதவிகிதம் மருந்தை 2 மில்லி ஒரு லிட்டர் தண்ணீர் என்ற அளவில் கலந்து ஒட்டு திரவம் கலந்து தெளிக்க வேண்டும். விவசாயிகள் அனைவரும் ஒட்டுமொத்தமாக மேற்கண்ட நடவடிக்கைகளை மேற்கொண்டு பப்பாளி மாவுப்பூச்சிகளின் தாக்குதலை கட்டுப்படுத்த முடியும்.
÷இவற்றை கட்டுப்படுத்தும் வகையில் முதல் கட்டமாக அசாடிராக்டின் ஒரு சதவீதம் மருந்தை இலவசமாக தெளிப்பு செய்ய தமிழக அரசு அறிவித்துள்ளது. ஒட்டு மொத்த மருந்து தெளிப்பு முகாமில் மரவள்ளி பயிரில் மாவுப்பூச்சி தாக்குதலை கட்டுப்படுத்த கைத்தெளிப்பான் மூலமாக மருந்து தெளிக்கப்பட்டது.
÷இந்நிகழ்ச்சியில் வேளாண்மை அலுவலர் து.இராஜகோபால் மற்றும் துணை வேளாண்மை அலுவலர் ச.சங்கரன் பேசினர்.

### மொத்தையனூரில் விவசாயிகள் விழிப்புணர்வு கூட்டம்

First Published : 20 Feb 2010 01:10:33 AM IST

சங்ககிரி,பிப்.19: வேளாண் துறை சார்பில் பயிர்களில் மாவுப்பூச்சி தாக்குதலை கட்டுப்படுத்துவது குறித்த விழிப்புணர்வுக் கூட்டம், சங்ககிரி ஊராட்சி மொத்தையனூரில் நடைபெற்றது (படம்).
வேளாண் இணை இயக்குநர் கருணாநிதி தலைமை வகித்துப் பேசியது:
மரவள்ளி, பப்பாளி, கொய்யா, மா, வாழையில் மாவூப்பூச்சி தாக்குதல்களை கட்டுப்படுத்த ஒருமித்த முறையில் மருந்து தெளிப்பதன் அவசியம் குறித்துப் பேசினார்.
துணை இயக்குநர்கள் தோட்டக்கலை பி.தசரதன், வேளாண்மைத் துறை ஜி.உதயகுமார், ஏத்தாப்பூர் ஆமணக்கு மற்றும் மரவள்ளி ஆராய்ச்சி நிலைய பேராசிரியர் வெங்கடேசன், சங்ககிரி வேளாண் உதவி இயக்குநர் ப.சௌந்தரராஜன், மொத்தையனூர் ஊராட்சி தலைவர் பெரியசாமி ஆகியோர் கலந்து கொண்டனர்.
மொத்தையனூர் பகுதியில் 20 ஹெக்டேரில் மரவள்ளி, வாழை, கோகோ, மா பயிர் செய்துள்ள 19 விவசாயிகளின் வயலில் மாவுப்பூச்சி தாக்குதலைக் கட்டுப்படுத்த ஒருமித்த முறையில் மருந்து தெளிக்கப்பட்டது. ஓலக்கசின்னானூரில் 15 ஹெக்டரில் 12 விவசாயிகள் வயலில் மருந்து தெளிக்கப்பட்டது.

### விழிப்புணர்வு பயிற்சி

First Published : 20 Feb 2010 12:27:00 AM IST

கள்ளக்குறிச்சி, பிப்.19: விவசாயிகளுக்கான மண் பரிசோதனை குறித்து விழிப்புணர்வு பயிற்சி முகாம் தியாகதுருகம் புதுமலர் கிரமா விழிப்புணர்வு அறக்கட்டளை சார்பில், அண்மையில் நடைபெற்றது.
இம்முகாமுக்கு பெரியமாம்பட்டு ஊராட்சி கவுன்சிலர் எம்.எஸ்.முருகன் தலைமை வகித்தார். விருகாவூர் செல்வராஜ், பிரிதிவிமங்கலத்தைச் சேர்ந்த விவசாயிகள் முன்னிலை வகித்தனர். புதுமலர் அறக்கட்டளை நிறுவனர் பி.ஜி.தனபால் வரவேற்றார்.
விழுப்புரம் வேளாண்மை அலுவலர் டி.செல்லபாண்டியன், கங்கொகொளரி, தியாகதுருகம் வேளாண்மை உதவி அலுவலர் தேவராஜ், தோட்டக்கலை துறை சுப்புராயன் மற்றும் உதவி அலுவலர்கள் பலரும் கலந்து கொண்டு பயிற்சி அளித்தனர்.
இப்பயிற்சியில் விவசாயிகள் மற்றும் வேளாண்மை பண்ணை மகளிர் குழு உறுப்பினர்கள் பயிற்சி பெற்றார்கள். பெரியமம்பட்டைச் சேர்ந்த முருகன் நிலத்தில் மண் பரிசோதனை செய்தனர்.

## கொள்முதல் வசதியின்றி தவிக்கும் கொப்பரை விவசாயிகள்

First Published : 20 Feb 2010 05:12:57 AM IST



கொப்பரைக்காக கடலூர் அருகே வெள்ளப்பாக்கம் கிராமத்தில் விவசாயி சங்கர் குவித்து வைத்து இருக்கும் நெற்றுத் தேங்காய்கள்.

கடலூர், பிப். 19: கடலூர் மாவட்டத்தில் பெருமளவில் தென்னை பயிரிடப்பட்டும், கொப்பரைத் தேங்காயை விற்று, பலனடைய முடியாமல் கடலூர் விவசாயிகள் தவித்து வருகின்றனர்.

கடலூர் மாவட்டத்தில் பெரும்பாலான வட்டங்களில் நிலத்தடி நீர்வளம் நன்றாக இருப்பதால் தென்னை பெருமளவுக்குப் பயிரிடப்பட்டு வருகிறது. தற்போது 10 ஆயிரம் ஏக்கரில் சுமார் 2.5 லட்சம் தென்னை மரங்கள் உள்ளன. இதில் இருந்து சராசரியாக ஒரு தென்னைக்கு, ஆண்டுக்கு 100 காய்களுக்குக் குறையாமல் தேங்காய் கிடைக்கிறது.

உற்பத்தியாகும் தேங்காய் பெரும்பாலும் இளநீராக வெட்டி, சென்னை உள்ளிட்ட நகரங்களுக்கு அனுப்படுகிறது. முற்றவைத்துத் தேங்காயாகவும் விற்பனை செய்யப்படுகிறது. இளநீராக விற்றாலும் முற்றிய தேங்காயாக விற்றாலும் விவசாயிக்கு ஒரு தேங்காய்க்கு விலையாகக் கிடைப்பது ரூ.2-ல் இருந்து ரூ.3 வரைதான்.

தேங்காய் பறிக்கவும் உரிக்கவும் ஆள்கள் கிடைக்காததால், பல விவசாயிகள் இளநீராக காய் ஒன்று ரூ.2 வீதம் விற்றுவிடுகிறார்கள். மேலும் கீற்று முடையவும் ஆள்கள் கிடைக்காததால், அதில் இருந்து கிடைக்கும் வருவாயும் விவசாயிகளுக்குக் கிடைப்பது இல்லை.

ஆனால் தென்னை அதிகம் பயிரிடப்பட்டு இருக்கும் தமிழகத்தின் பிற மாவட்டங்களில், கொப்பரைத் தேங்காயாக விற்பனை செய்வதால், தென்னை விவசாயிகளுக்கு நியாயமான விலை கிடைக்கிறது. அந்த மாவட்டங்களில் அரசு கொள்முதல் நிலையங்கள் மூலம் கொப்பரைத் தேங்காய் கொள்முதல் செய்யப்படுகிறது.

தற்போதைய கொள்முதல் விலை கிலோவுக்கு ரூ.44.50 ஆக உள்ளது. இதன் அடிப்படையில் பார்த்தால் தேங்காய் ஒன்றுக்கு ரூ.4.45 வரை விலை கிடைக்கும் என்கிறார்கள் கடலூர் தென்னை விவசாயிகள்.

ஈரோடு, பேராவூரணி, பட்டுக்கோட்டை, தஞ்சை உள்ளிட்ட பல இடங்களில் அரசு கொப்பரைத் தேங்காய் கொள்முதல் நிலையங்கள் உள்ளன. கடலூர் மாவட்டத்தில் கொப்பரைத் தேங்காய் கொள்முதல் நிலையமும் இல்லை.

பிற மாவட்டங்களில் உள்ள கொப்பரைத் தேங்காய் கொள்முதல் நிலையங்களுக்குக் கொண்டு சென்று விற்பனை செய்யவும் அரசு அனுமதி வழங்கப்படவில்லை. இதனால் தனியாரிடம் கொப்பரைத் தேங்கயை கிலோ ரூ.33-க்கு விற்பனை செய்ய வேண்டிய கட்டாயம் காரணமாகக் கடலூர் மாவட்டத் தென்னை விவசாயிகள் பெரிதும் பாதிப்புக்கு உள்ளாகி இருக்கிறார்கள்.

இதுகுறித்து வேளாண் துறை அதிகாரி ஒருவர் கூறியது:

2000-மாவது ஆண்டு கடலூர் மாவட்டத் தென்னை விவசாயிகள் கொப்பரைத் தேங்காயை, நாகை மாவட்டத்துக்குக் கொண்டு சென்று விற்பனை செய்ய சிறப்பு அனுமதி வழங்கப் பட்டது. அப்போது தென்னை விவசாயிகளுக்கு நியாயமான விலை கிடைத்தது.

அதன்பிறகு கடலூர் மாவட்ட விவசாயிகளுக்கு சிறப்பு அனுமதியும் வழங்கவில்லை, கொள்முதல் நிலையமும் திறக்கவில்லை. 2000 ஆண்டில் கொப்பரைத் தேங்காய் கொள்முதலில் நடந்த ஊழல் காரணமாக சிறப்பு அனுமதி வழங்குது 2001-ல் நிறுத்தப்பட்டது என்றும் அதிகாரி ஒருவர் தெரிவித்தார். தற்போது கடலூரை அடுத்த வெள்ளப்பாக்கம் விவசாயிகள் சங்கர் சேரலாதன் ஆகிய இருவர் மட்டுமே தற்போது 25 டன் கொப்பரைத் தேங்காயை தயாரித்து, விற்பனைக்கு வழித்தெரியாமல் விழித்துக் கொண்டு இருக்கிறார்கள். இதுகுறித்து மாவட்ட ஆட்சியரிடம் முறையிட்டும் இதுவரை பலன் கிடைக்க வில்லை என்றும் விவசாயி சங்கர் தெரிவித்தார்.

இதுகுறித்து அனைத்து விவசாயிகள் சங்க கடலூர் மாவட்ட அமைப்பாளர் ரவீந்திரன் கூறுகையில்,

""கடலூர் மாவட்டத்தில் தென்னை விவசாயிகள் நியாமான விலை கிடக்காததால் பெரிதும் பாதிக்கப்பட்டு உள்ளனர். தேங்காய் பறித்தல், உரித்தல், கீற்று முடைதல் போன்ற வேலைகளுக்கும் ஆள்கள் கிடைப்பதில்லை. இருக்கின்ற தென்னை மரங்களை வெட்டி விடலாமா என்று யோசித்து வருகிறார்கள். கொப்பரைத் தேங்காய் கொள்முதல் செய்யும் அளவுக்கு தென்னை மரங்கள் உள்ளன. கடலூர் மாவட்டத் தென்னை விவசாயிகளைக் காப்பாற்ற வேண்டுமானால் கொப்பரைத் தேங்காய் கொள்முதலுக்கு அரசு ஏற்பாடு செய்ய வேண்டும்" என்றார்.

தினமலர்

### நெல் கொள்முதல் மையங்களில் வியாபாரிகள் கொள்ளை : குறைதீர் கூட்டத்தில் விவசாயிகள் சரமாரி புகார்

மதுரை : "நெல் கொள்முதல் மையங்களில் வியாபாரிகள் ஆதிக்கம் மேலோங்கி உள்ளது' என குறைதீர் கூட்டத்தில் விவசாயிகள் குற்றம்சாட்டினர்.

மதுரை மாவட்ட விவசாயிகள் குறைதீர் கூட்டம் விவசாயத் துறை இணை இயக்குனர் சங்கரலிங்கம் தலைமையில் நடந்தது. கூட்டுறவு சங்கங்களின் இணைப்பதிவாளர் குமார், கலெக்டரின் நேர்முக உதவியாளர் தெய்வேந்திரன், பல்வேறு துறை அதிகாரிகள்,

விவசாய சங்க பிரதிநிதிகள், கலந்து கொண்டனர். கூட்டத்தில் பங்கேற்ற விவசாயிகளில் பலர் மாவட்ட நிர்வாகத்தை கடுமையாக குற்றம் சாட்டினர்.

விவசாயிகள் பேசியதாவது: விவசாயிகள் கொண்டு வரும் நெல்லை, ஈரப்பதம் உள்ளதென அனுப்பும் அதிகாரிகள், அதேநெல்லை கொண்டு வரும் வியாபாரிகளிடம் அப்படி கூறுவதில்லை. கமிஷன் கடைகளைவிட, இங்கு கூடுதலாக கொள்ளையடிக்கின்றனர். நெல் கொள்முதல் மையங்களில் கூலி உட்பட அனைத்து விபரங்களையும் போர்டில் எழுதி வைக்க வேண்டும் எனக் கூறியும் நடவடிக்கை இல்லை. முன்பு ஒருமூடை நெல் 700 ரூபாயாக இருந்தது, தற்போது 600 ரூபாயாகிவிட்டது. இதற்கு வியாபாரிகள் கையில் மையங்கள் உள்ளதே காரணம் என்றனர். இதற்கு பதிலளித்த கூட்டுறவு சங்க அதிகாரி, "கூட்டுறவு சங்க மையங்களில் அந்நிலை இல்லை' என்றார்.

சில விவசாயிகள், சிக்கந்தர்சாவடி உட்பட மேலும் சில பகுதிகளில் மையங்களை திறக்க வேண்டும். கூடுதல் மையம் திறக்காததே விலை குறைய காரணம். மாவட்ட நிர்வாகம் இவ்விஷயத்தில் தூங்குகிறதா? என கேட்டனர்.

"இன்னும் ஒருவாரத்தில் கூடுதல் மையங்கள் அமைப்போம்,' என அதிகாரிகள் தெரிவித்தனர்.

"ஒருமாதம்தான் அறுவடை சீசன். எனவே உடனே திறக்க வேண்டும். கண்காணிப்பு குழு அமைக்க வேண்டும்' என

விவசாயிகள் கேட்டுக் கொண்டனர்.

தோட்டக்கலை துறை மீது புகார்: "மதுரை மாவட்ட விவசாயிகளுக்கு தோட்டக்கலை பண்ணை மூலம் போதிய மரக்கன்றுகள் கிடைப்பதில்லை. செல்லம்பட்டி தோட்டக்கலை அதிகாரி அலுவலகத்திற்கே வருவதில்லை. அலங்காநல்லூர் யூனியனில் சிறுமலை அடிவாரத்தில், ராமகவுண்டன்பட்டியில் 45 ஏக்கர் நிலம் உள்ளது. இங்கு தோட்டக்கலைப் பண்ணை அமைத்தால் விவசாயிகள் பலன்பெறுவர்' என்றனர்.

சில விவசாயிகள் தற்போது நெல் அறுவடை நடந்து வருகிறது. அதற்கான இயந்திரங்களை தனியாரிடம் பெற்றால், பல ஆயிரம் வாடகை செலுத்த வேண்டியுள்ளது. மாவட்டத்தில் உள்ள இரண்டு இயந்திரங்கள் குறித்து கேட்டால், பழுதாகிவிட்டது, வெளி மாவட்டத்திற்கு சென்றுள்ளது என பதில் வருகிறது. மேலும் மிகவும் பழைய இயந்திரங்களை விற்றுவிட்டு புதிய இயந்திரங்களை வாங்க வேண்டும். விவசாயிகளுக்கு பயன்பெறும் வகையில், யூனியனுக்கு இரண்டு இயந்திரங்கள் இருக்க வேண்டும் என கோரிக்கை விடுத்தனர்.

இதற்கு பதிலளித்த அதிகாரிகள், " மணிக்கு 750 ரூபாயை விவசாயிகள் செலுத்தினால் உடனடியாக இயந்திரம் அனுப்பி வைக்கப்படும். தற்போது ஒரு இயந்திரம் மேலூரிலும், மற்றொன்று சக்கிமங்கலம் பகுதியிலும் அறுவடை செய்கிறது. வெளிமாவட்டத்திற்கு இயந்திரங்கள் அனுப்பப்பட மாட்டாது' என்றனர்.

### மல்லிகைப்பூ ரூ. 200

பொள்ளாச்சி : பொள்ளாச்சி பூ மார்க்கெட்டிற்கு, திண்டுக்கல், நிலக்கோட்டை பகுதிகளிலிருந்து பூ வரத்துள்ளது. சில மாதங்களாக பனி பொழிவு காரணமாக பூ சாகுபடி இல்லாததால், வரத்து குறைந்திருந்தது.நேற்று சந்தைக்கு ஐந்து டன் பூ வரத்திருந்தது. நேற்றைய நிலவரப்படி,

நேற்று  மல்லிகை கிலோ 200 ரூபாய்க்கும், சம்பங்கி - 120, அரளி -140, கோழிக்கொண்டை - 40, வெள்ளை செவ்வந்தி- 80, மஞ்சள் செவ்வந்தி - 100 என்ற விலையில் விற்பனையானது.  பூ வியாபாரிகள் கூறியதாவது: வெயிலின் தாக்கம் அதிகரித்துள்ளதாலும், உள்ளூர் பகுதியில் பூ சாகுபடி குறைந்துள்ளதாலும் சந்தைக்கு பூ வரத்து குறைந்துள்ளது. இனி வரும் நாட்களில் பூ விலை மேலும் அதிகரிக்கும் வாய்ப்புள்ளது என்றனர்.

### வேளாண் பொறியியல் திட்டத்தில் ரூ.10.8 லட்சத்தில் பணிகள் துவக்கம்

நாமக்கல்: திருச்செங்கோட்டில் வேளாண் பொறியியல் துறை சார்பில் 11வது ஐந்தாண்டு நவப்ரா திட்டத்தின் கீழ் 10.8 லட்சம் ரூபாய் மதிப்பில் மேற்கொள்ளப்படும் பணி துவக்க விழா நடந்தது.

திட்ட செயலாளராக முகமை உதவி செயற்பொறியாளர் பார்த்திபன் தலைமை வகித்து, பணிகளை துவக்கி வைத்து பேசியதாவது: உதவி செயற்பொறியாளர் வேளாண் பொறியியல் துறை மூலம் செயல்படும் திருச்செங்கோடு வட்டார பகுதியில் ஒன்பது நீர்வடிப் பகுதிகளில் 10.8 லட்சம் ரூபாய் மதிப்பில் திட்ட முகப்பு பணி, கதிரடிக்கும் களம், சமையல் கூடம், சிறிய நீர்தேக்க தொட்டி, நூலக கட்டட சுற்றுச்சுவர், தடுப்புச் சுவர் உள்ளிட்ட பணிகள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. இப்பணிகள் விரைந்து முடிக்கப்படும். இவ்வாறு அவர் பேசினார். உதவி பொறியாளர் விஜயன், திட்ட மேம்பாட்டுக் குழு உறுப்பினர்கள் ராஜமாணிக்கம், செந்தில்குமார், முருகன், நீர்வடிப் பகுதி சங்க தலைவர்கள் பங்கேற்றனர்.

### கொப்பரை தேங்காய் கொள்முதல் நிலையம் என்னாச்சு : குறைதீர் கூட்டத்தில் விவசாயிகள் கேள்வி

புதுக்கோட்டை : அறந்தாங்கியில் கொப்பரைதேங்காய் கொள்முதல் நிலையம் விரைந்து திறக்க வேண்டும் என்று விவசாயிகள் குறைதீர் கூட்டத்தில் விவசாயிகள் வலியுறுத்தினர்.

புதுகை கலெக்டர் அலுவலகத்தில் நடந்த விவசாயிகள் குறைதீர் கூட்டத்திற்கு கலெக்டர் சுகந்தி தலைமை வகித்து

பேசியதாவது : மாவட்டத்தில் நடப்பு ஆண்டில் இதுவரை 86ஆயிரத்து948 எக்டர் பரப்பளவில் நெல், 4ஆயிரத்து957 எக்டர் பரப்பளவில் சிறுதானியங்கள், 7ஆயிரத்து392 எக்டர் பரப்பளவில் பயறுவகைகள், 3ஆயிரத்து141 எக்டர் பரப்பளவில் கரும்பு, 10ஆயிரத்து818 எக்டர் பரப்பளவில்  நிலக்கடலை, 2ஆயிரத்து600 எக்டர் பரப்பளவில் எள் சாகுபடி செய்யப்பட்டுள்ளது.

33 வேளாண் விரிவாக்க மையங்களில் 110 மெ.டன் நெல் விதைகள், 22 மெ.டன் பயறு விதைகள், 60மெ.டன் எண்ணெய் வித்து விதைகளும் இருப்பில் உள்ளது. விவசாயிகள் தரமான சான்று பெற்ற விதைகளை வேளாண் விரிவாக்க மையங்களில் வாங்கி பயன்பெற வேண்டும். மாவட்டத்தில் ஆயிரத்து472 மெ.டன் டிஏபி, 2ஆயிரத்து913 மெ.டன் யூரியா, ஆயிரத்து519 மெ.டன் பொட்டாஷ், ஆயிரத்து542 மெ.டன் காம்ப்ளக்ஸ் உரங்கள் இருப்பு வைக்கப்பட்டு கூட்டுறவு நிறுவனங்கள் வாயிலாக விற்பனை செய்யப்பட்டு வருகிறது.

கடந்த ஆண்டு மாவட்டத்தில் 90 எக்டர் பரப்பளவில் கரும்பில் துல்லிய பண்ணையம் அமைக்கப்பட்டது. இந்தாண்டு 120 எக்டர் பரப்பளவில் கரும்பில் துல்லிய பண்ணையம் அமைக்கப்பட்டுள்ளது. மண்புழு உரம் உற்பத்தி செய்வதற்கு 50ஆயிரம் ரூபாய் மானியம் வழங்கப்பட்டு வருகிறது. இவ்வாறு அவர் பேசினார்.

கூட்டத்தில் நடந்த விவாதம் வருமாறு : முத்துக்குமரன்@ மாவட்டத்தில் பல இடங்களில் முந்திரி பயிரிட்டுள்ளதை அழித்து விட்டு வனத்துறையினர் ஆர்எஸ்பதி மரங்களை வளர்த்து வருகிறார்கள். அரசு ஆர்எஸ்பதி மரங்களை வளர்க்க தடை விதித்திருக்கும் போது வனத்துறைக்கு ஆர்எஸ்பதி மரங்களை பயிரிட அனுமதி அளித்தது யார்? மேலும் மாவட்டத்தில் தொடர்ந்து நிலவும் மின்தட்டுப்பாட்டினால் மும்முனை மின்சாரம் எப்போது கிடைக்கும் என்று விவசாயிகளுக்கு தெரியவில்லை. மின்தட்டுப்பாட்டினை போக்கநடவடிக்கை எடுக்க வேண்டும்.அறந்தாங்கியில் கொப்பரை தேங்காய் கொள்முதல் நிலையம் எப்போது திறக்கப்படும். விரைவில் கொள்முதல் நிலையம் திறந்தால் விவசாயிகள் பயன்பெறுவார்கள்.(இதே கருத்தை பல விவசாயிகள் வலியுறுத்தினர்).

ராகவன்(டிஆர்ஓ) :  வனத்துறையிடம் பதில் பெற்று நடவடிக்கை எடுக்கப்படும். மின்தட்டுப்பாடு தமிழகம் முழுவதும் உள்ளது. விவசாயிகளுக்கு மும்முனை மின்சாரம் 10 மணி நேரம் கிடைக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

திருப்பதி :  தேக்கு கன்றுகள் தோட்டக்கலைத்துறை மூலம் கிடைக்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.

பொன்னுசாமி: கறம்பக்குடி பகுதியில் 100க்கும் மேற்பட்ட செம்மறி ஆடுகள்  திடீரென்று  இறந்து விட்டது. சிலர் இறந்த ஆடுகளை புதைத்து விட்டனர். ஒரு சிலர் இழப்பீடு கேட்டு விண்ணப்பித்துள்ளனர். பாதிக்கப்பட்ட அனைவருக்கும் இழப்பீடு அளிக்க ஏற்பாடு செய்ய வேண்டும். விவசாய நல வாரியத்தின் நலத்திட்டங்கள் விரைந்து கிடைக்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.

சுகந்தி :  நலவாரிய பயனாளிகள் விண்ணப்பங்கள் சென்னைக்கு சென்று திரும்ப வேண்டியிருப்பதால் காலதாமதம் ஏற்படுகிறது. இதனை விவசாயிகள் பொறுத்துக்கொள்ளத் தான் வேண்டும்.

மணிவேல் :  குளத்தூர் தாலுகாவில் நேரடி நெல் கொள்முதல் நிலையம் திறக்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.

சுகந்தி : நுகர்பொருள் வாணிப கழகத்தினர் ஆய்வு செய்த பின்னர் தேவைப்படின் நேரடி நெல் கொள்முதல் நிலையம் திறக்க ஏற்பாடு செய்யப்படும்.அறந்தாங்கியில் கொப்பரை தேங்காய் கொள்முதல் நிலையம் திறப்பதற்கு விவசாயிகள் செய்த பதிவு விண்ணப்பங்கள் 70 சதவீதம் சோதனை செய்யப்பட்டுள்ளது. மீதமுள்ள விண்ணப்பங்கள் சோதனை செய்த பிறகு அடையாள அட்டைகள் வழங்கப்பட்டு கொள்முதல் நிலையம் திறக்கப்படும். மாவட்டத்தில் 399 விஏஓவினருக்கு 199 விஏஓ தான் பணிபுரிந்து வருகின்றனர். ஆகையால் தான் அரசு அலுவலக பணிகள் பாதிப்பிற்கு உள்ளாகி உள்ளது.

காமராசு : தேங்காய் கொள்முதல் நிலையத்தில் பதிவு செய்துள்ள விவசாயிகளுக்கு பயிற்சி அளிக்க வேண்டும். அம்புலியாறு-நகரம்- செரியலூர் ஜமீன், செரியலூர் இனாம் ஆகிய பகுதிகளில் நீர்வள, நிலவளத்திட்டம் முறையாக செயல்படுத்தப்படுவதில்லை.

சுகந்தி : கொள்முதல் நிலையத்தில் பதிவு செய்துள்ள விவசாயிகளுக்கு அடையாள அட்டை வழங்கிய பிறகு பயிற்சி அளிக்கப்படும்.

பன்னீர்செல்வம் : கறம்பக்குடி பகுதியில் பால்கொள்முதல் நிலையம் அமைக்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.

சுகந்தி : வேளாண் வணிகத்துறை அதிகாரிகள் ஆய்வு செய்த பின்னர் பால் கொள்முதல் செய்ய நடவடிக்கை எடுக்கப்படும்.

முருகானந்தம் :மாவட்டத்தில் தேசிய வேலை உறுதி திட்டத்தில் 100 ரூபாய் கூலி முறையாக வழங்கப்படுவதில்லை.

சுகந்தி@ பொதுவாக வழங்கப்படுவதில்லை என்று விவசாயிகள் குறைகூறுவதை விட்டு விட்டு, ஆதாரத்துடன் புகார் தெரிவித்தால் நடவடிக்கை எடுக்கப்படும். மேலும் தேசிய வேலை உறுதி திட்டத்தில் நடக்கும் முறைகேடுகள் குறித்து புகார் தெரிவிக்க கடந்த 2 மாதங்களுக்கு முன்பு தனி தொலைபேசி நம்பரை மாவட்ட நிர்வாகம் அறிவித்து இருந்தாலும், இதுவரை ஒருவர் கூட அந்த டெலிபோனில் புகார் கொடுக்கவில்லை.

சூசைராஜ்: கோரையாறு பகுதியில் நீர்வள, நிலவளத்திட்டத்தில் வேலைகள் நடக்க வில்லை.

சுகந்தி : அரசு இந்தாண்டு நடைமுறைப்படுத்தும் இடங்களில் கோரையாறு இல்லை.

ராமநாதன் : கீரனூர் பகுதியில் ஐந்து தனியார் விதை விற்பனை நிலையம் உள்ளது. வேளாண் அதிகாரிகள் சான்று பெற்ற விதைகள் வாங்க சீட்டு அளித்தாலும், கூடுதல் விலைக்கு தான் விதைகளை விற்கிறார்கள்.

சுகந்தி : ஆய்வுக்கு பிறகு நடவடிக்கை எடுக்கப்படும்.

சுபகணேசன் : தெற்கு வெண்ணாறு பகுதியில் 13 ஷட்டர்கள் பழுதடைந்த நிலையில் உள்ளது.

சுகந்தி: பழுதடைந்த ஷட்டர்களை சீர் செய்ய நடவடிக்கை எடுக்கப்படும்.

செபஸ்தியான் : தெற்கு செட்டியாபட்டியில் துணை சுகாதார நிலையம் 2 மாத காலமாக பூட்டி கிடக்கிறது.

சுகந்தி : உடனடியாக திறக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

**அதிகாரிகள் நினைத்தால்... விவசாயிகள் தாங்க மாட்டார்கள்... :**

புதுகையில் நடந்த விவசாய குறைதீர் கூட்டத்தில் கலெக்டர் சுகந்தி பேசுகையில் விவசாயிகள் குறைதீர் கூட்டத்தில் விவசாயிகள் எந்தெந்த விஷயங்கள் பேசணும், பேசக்கூடாது என்று அரசு விதி உள்ளது. ஆனால் விவசாயிகளின் நலன் கருதி புதுகை மாவட்ட அரசு அதிகாரிகள் ஒரு சில விஷயங்களை பேச அனுமதிக்கிறோம். விவசாயிகள் விவசாயம் சம்பந்தப்பட்ட பொதுப்பிரச்னைகளை மட்டும் பேச வேண்டும். ஒரு சில அரசு அதிகாரிகள் செய்யும் தவறினால் ஒட்டுமொத்த அரசு அதிகாரிகளையும் குற்றம் சாட்டுவதை இன்றோடு நிறுத்திக்கொள்ள வேண்டும். அதிகாரிகளுக்கும் சுய மரியாதை உள்ளது. அவர்களும் கொஞ்சம் தான் பொறுத்துக்கொள்வார்கள். ஓவராக அவர்களை சீண்டி பார்க்காதீர்கள். அதிகாரிகள் நினைத்தால், அவர்கள் திரும்பினால் விவசாயிகள் தாங்க மாட்டார்கள் என்றார். கலெக்டரின் இந்த பேச்சு அதிகாரிகள் மற்றும் அரசு அலுவலர்கள் மனதில் ஒரு சிறு மகிழ்ச்சியை ஏற்படுத்தினாலும், விவசாயிகள் கடும் அதிருப்தியடைந்துள்ளனர்.

## தேக்கிய நிலக்கடலையை விற்க அதிகாரிகள் யோசனை: விலை சரியும் அபாயம் உள்ளதால் விவசாயிகள் கவலை

சேலம்: விவசாயிகள் தேக்கி வைத்துள்ள நிலக்கடலையை உடனடியாக விற்பனை செய்ய வேண்டும். விலை சரியும் அபாயம் உள்ளதால் தற்போதே லாபத்தை ஈட்டும் முயற்சியை மேற்கொள்ளுமாறு வேளாண் அதிகாரிகள் யோசனை தெரிவித்துள்ளனர். இந்தியாவின் முக்கிய எண்ணெய் வித்துப் பயிராக விளங்குவது நிலக்கடலை. கடந்த ஓராண்டாக அதன் விலை தேக்கநிலையை சந்தித்து வந்துள்ளது. குறைந்தபட்ச விலையாக குவிண்டாலுக்கு 2,300 லிருந்து 3,000 ரூபாயாக இருந்தது. நிலக்கடலை பயிருக்கு கரீப் முக்கியமான பருவமாகும். 2008 - 09ம் ஆண்டு கரீப் பருவத்தில் 42.2 லட்சம் டன்களாக இருந்த நிலக்கடலை உற்பத்தி 2009 - 10ல் 32.9 லட்சம் டன்னாக குறைந்துள்ளது. நிலக்கடலை அதிகம் உற்பத்தி செய்யும் மாநிலத்தில் குஜராத் முதலிடம் வகிக்கிறது. இம்மாநிலத்தில் கடந்த ஆண்டில் 18 லட்சம் ஏக்கரில் கடலை பயிரிடப்பட்டது. ஆனால், நடப்பாண்டில் 16.35 லட்சம் ஏக்கராக குறைந்துள்ளது. பருவம் தவறிய மழை, விவசாயிகள் பருத்திக்கு மாறியது ஆகியவை சரிவுக்கு முக்கிய காரணமாகும். இந்திய அளவில் கரீப் நிலக்கடலை

சாகுபடி பரப்பு 53 லட்சம் ஏக்கராக இருந்தது. தற்போது 44 லட்சம் ஏக்கராக குறைந்துள்ளது. அதிகபட்சமாக ஆந்திரா மாநிலத்தில் இதன் சாகுபடி வெகுவாக குறைந்துள்ளது. எண்ணெய் வித்து பயிர்கள் விலை குறைவுக்கு முக்கியக் காரணம், பனை எண்ணெய் இறக்குமதியாகும். 2009ல் 70 லட்சம் மெட்ரிக் டன் பனை எண்ணெய் இறக்குமதி செய்யப்பட்டது. உலக அளவில் பனை எண்ணெய் இறக்குமதியில் இந்தியா முதலிடத்தில் உள்ளது. இந்திய எண்ணெய் வித்துக்கள் உற்பத்தி மற்றும் ஏற்றுமதி ஊக்குவிப்புக் கழகம், நிலக்கடலைப் பருப்பின் உலர்ந்த, உப்பிட்ட மற்றும் பாக்கெட்டில் அடைக்கப்பட்ட பருப்பின் தேவை அதிகரித்துள்ளதாக தெரிவித்துள்ளது. 10 லட்சம் மெட்ரிக் டன் நிலக்கடலை பருப்பு உணவு பொருளாகவும், ஏழு லட்சம் மெட்ரிக் டன் பருப்பு விதைப்புக்கும், 1.50 லட்சம் டன் ஏற்றுமதிக்கும் செல்கின்றன.
தமிழ்நாட்டை பொறுத்தமட்டில், நிலக்கடலை சாகுபடி ஐந்து லட்சம் ஏக்கரில் மேற்கொள்ளப்பட்டுள்ளது. 70 சதவீத சாகுபடி மானாவாரிப் பயிராகவும், 30 சதவீதம் பாசனப்பயிராகவும் பயிரிடப்படுகிறது. கடலூர், விழுப்புரம், திருவண்ணாமலை, வேலூர், காஞ்சிபுரம், திருவள்ளூர், அரியலூர் மாவட்டங்கள் தமிழ்நாட்டில் நிலக்கடலை உற்பத்தி செய்வதில் முக்கிய இடம் வகிக்கின்றன. சந்தைத் தகவலின்படி, நிலக்கடலை சாகுபடி பரப்பு தமிழகத்தில் மட்டுமல்லாமல் இந்தியாவின் மற்ற பகுதிகளிலும் குறைந்துள்ளது. இந்த ஆண்டு மழைப்பற்றாக்குறையால், உற்பத்தித் திறனும் குறைந்துள்ளது. கூலியாட்கள் பற்றாக்குறையால் விவசாயிகள் நிலக்கடலை பயிரிடுவதை தவிர்த்து, மக்காச்சோளம் பயிரிட்டு வருகின்றனர். குறைந்த நிலக்கடலை உற்பத்தி, அதிகரித்துள்ள தேவை, மாற்று உணவு எண்ணெய்களின் இறக்குமதி போன்ற காரணங்கள் உள்ளன. நல்ல விலை கிடைக்க விவசாயிகள் தாங்கள் இருப்பில் வைத்துள்ள நிலக்கடலையை உடனடியாக விற்பனை செய்ய வேண்டும். விவசாயிகள் யோசனை செய்யாமல் விற்பனைக்கு கொண்டு வரவேண்டும் என வேளாண் அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

தமிழ்நாடு வேளாண் பல்கலையில் உள்ள ஊரக மேம்பாட்டு ஆய்வு மையத்தில் இயங்கி வரும் தேசிய வேளாண் புதுமைத் திட்டத்தின் உள்நாட்டு மற்றும் ஏற்றுமதி சந்தையான சேவூர் ஒழுங்குமுறை விற்பனைக் கூடம் 15 ஆண்டு விலைத்தகவலை ஆய்வு செய்தது. அதன்படி குறைந்துள்ள நிலக்கடலை சாகுபடியால், விலை அதிகரிக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. பனை எண்ணெய் உற்பத்தி குறைய வாய்ப்பு இருந்தாலும், அதை சோயாவின் உற்பத்தி மூலம் ஈடுகட்டலாம். மேலும், பனை எண்ணெய் கையிருப்பு, பருத்தி மற்றும் நெல் உமி எண்ணெயின் உபயோகம் போன்றவை நிலக்கடலை விலையை ஏற விடாது. உடைக்காத நிலக்கடலையின் பண்ணை விலை பிப்ரவரி முதல் ஏப்ரல் வரை குவிண்டாலுக்கு 2,900 முதல் 3,100 ரூபாய் வரை கிடைக்கும். மே, ஜூனில் 100 முதல் 200 ரூபாய் வரை அதிகரிக்க த்�ய்ப்புள்ளது. மத்திய அரசு பனை எண்ணெய்க்கு இறக்குமதி வரி விதித்தால் விலை அதிகரிக்கும் அல்லது அரசே பனை எண்ணெயை இறக்குமதி செய்தால் விலை சரிய வாய்ப்புள்ளது. விவசாயிகள் தேக்கி வைத்துள்ள நிலக்கடலையை உடனே விற்று நல்ல லாபத்தை ஈட்டும் முயற்சியை மேற்கொள்ள வேண்டும் என சேலம் வேளாண் துணை இயக்குனர் நாகராஜன் தெரிவித்துள்ளார்.

### விவசாயிகளுக்கு பயிற்சி

சிவகங்கை : உலக வங்கி நிதி உதவியுடன் தமிழ்நாடு விவசாய பல்கலை சார்பில் செயல்படும் நீர், நிலவள திட்டத் தில், கோட்டைக்கரையார் உபவடிநில கோட்ட பகுதியில், மக்காச்சோளம் பயிரிடும் விவசாயிகளுக்கு, வாணியங்குடியில் பயிற்சி வழங்கப்பட்டது. மண் மற்றும் சுற்றுச்சூழல் துணை தலைவர் முகம் மதுஹாரூன் ஆலோனை வழங்கினார். திட்ட பொறுப்பாளர் இந்திராணி மக்காச்சோளம் பயரிடும் முறை பற்றி விளக்கினார். இளநிலை ஆராய்ச்சியாளர்கள் தமிழ்செல்வி, தாரணி, தேவிகா ஏற் பாட்டை செய்தனர்.

### விவசாயிகள் குறைதீர் கூட்டம்

கும்பகோணம் :குடந்தைகோட்ட அளவிலான விவசாயிகள் குறைதீர்க்கும் நாள் கூட்டம் 22ம்தேதி காலை 11 மணிக்கு ஆர்.டி.ஓ., அலுவலகத்தில் நடக்கிறது.இதுகுறித்து ஆர்.டி.ஓ., செங்குட்டுவன் வெளியிட்டுள்ள செய்தி குறிப்பு: இக்கூட்டத்தில் அனைத்து விவசாயிகள், விவசாய சங்க பிரதிநிதிகள் கலந்து கொண்டு தங்களது குறைகளை தெரிவிக்கலாம். அனைத்து துறை அலுவலர்கள் தங்களது துறை சம்பந்தப்பட்ட விவரங்களுடன் கூட்டத்தில் உரிய நேரத்தில் தவறாது கலந்து கொள்ள வேண்டும். இவ்வாறு அவர் அறிக் கையில் கூறி உள்ளார்.

### உர விலையை உயர்த்தும் முடிவை கைவிடணும்: விவசாயிகள் வலியுறுத்தல்

திருச்சி:விவசாயத்திற்கான உரங்களின் விலையை 10 சதவீதம் உயர்த்த மத்திய அரசு எடுத்துள்ள முடிவை கைவிட வேண்டும் என்று திருச்சியில் நடந்த குறைதீர்க்கும் நாள் கூட்டத்தில் விவசாயிகள் வலியுறுத்தினர்.திருச்சி மாவட்ட விவசாயிகள் குறைதீர்க்கும் நாள் கூட்டம் நவலூர் குட்டப்பட்டில் உள்ள அன்பில் தர்மலிங்கம் வேளாண்மைக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தில் நேற்று நடந்தது. கூட்டத்திற்கு கலெக்டர் சவுண்டையா தலைமை வகித்தார். வேளாண்மை இணை இயக்குனர் பொன்னுசாமி, கலெக்டரின் நேர்முக உதவியாளர் (விவசாயம்) ராமசாமி ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

கூட்டத்தில் விவசாயிகள் கூறிய கருத்துக்களும், அவற்றிற்கு அதிகாரிகள் அளித்த பதில்களின் விவரமும் பின் வருமாறு:கருப்பண்ணன் (திமுக விவசாய அணி): கடந்த ஒரு வாரமாக கிராமப்புறங்களில் மின் விநியோகம் சீராக இல்லை. இதை சரி செய்வதுடன், 6 மணி நேரம் மின் விநியோகம் செய்தாலும் அதை தொடர்ச்சியாகவும், முன்னறிவிப்புடனும் விநியோகம் செய்ய வேண்டும்.மின்வாரிய அதிகாரி: கடந்த ஒரு வாரமாக தமிழகத்தில் 2 ஆயிரம் மெகாவாட் மின்சாரம் பற்றாக்குறையாக உள்ளது. அதனால் தான் இந்த மின்தடை உள்ளது. இந்த வாரத்திற்குள் இப்பிரச்னை சரி செய்யப்பட்டு அடுத்த வாரம் முதல் மின் விநியோகம் சீரடையும்.கலெக்டர்: கிராமப்புறங்களில் மின் விநியோகம் செய்யப்படும் நேரத்தை விவசாயிகள் தெரிந்து கொள்ளும் வகையில் விளம்பரப்படுத்த வேண்டும்.

புலியூர் நாகராஜன் (காங்.,விவசாய பிரிவு): விவசாயத்திற்கான உரங்களின் விலையை 10 சதவீதம் உயர்த்த மத்திய அரசு முடிவு செய்துள்ளது. இதை மறுபரிசீலனை செய்ய வேண்டும். உய்யக்கொண்டான் கால்வாய் உள்ளிட்ட திருச்சி மாவட்ட காவிரி பாசனத்தின் 17 கிளை வாய்க்கால்களிலும் கோடை சாகுபடிக்கு வழக்கம் போல் தொடர்ந்து தண்ணீர் திறந்துவிட வேண்டும். கோடைகாலத்தில் குடிநீருக்காகவும், பாசனத்திற்கும் மேட்டூர் அணையிலிருந்து காவிரியில் 3 ஆயிரம் கன அடி தண்ணீர் திறந்துவிட வேண்டும். அந்த சமயத்தில் கரூர், ஈரோடு, நாமக்கல் ஆகிய 3 மாவட்டங்களில் காவிரி ஆற்றிலிருந்து நீர் எடுக்கும் ராட்சத மோட்டார்களின் இணைப்புகளை துண்டிக்கவும் கலெக்டர் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

கலெக்டர்: உய்யக்கொண்டான் ஆற்றில் கோடை சாகுபடிக்கு தண்ணீர் விடுவது குறித்து ஆற்றுப்பாதுகாப்பு கோட்ட அதிகாரிகள் விவசாயிகளுடன் ஆலோசனை நடத்தி, தண்ணீர் விட முடியுமா, முடியாதா, சாகுபடி செய்யலாமா, வேண்டாமா என்பதை ஒரு வாரத்திற்குள் அறிவிக்க வேண்டும். கோடையில் காவிரியில் தண்ணீர் திறக்கும்போது 3 மாவட்டங்களில் உள்ள ராட்சத மோட்டார் இணைப்புகளை துண்டிக்க 3 மாவட்ட கலெக்டர்களுக்கும் கடிதம் எழுதப்படும்.சிவராஜ் (அதிமுக விவசாய அணி): கடந்த 2 ஆண்டுகளாக திருச்சி மாவட்ட வேளாண் பொறியியல் துறை சார்பில் சொட்டு நீர் பாசனத்திட்டத்தின் கீழ் ஒரு பணி கூட நடைபெறவில்லை. அத்துறைக்கு நிதி ஒதுக்கீடு இல்லையா?வே.பொறியியல் துறை அலுவலர்: பார்த்துவிட்டுச் சொல்கிறேன்.(இந்த பதிலைக் கேட்ட கலெக்டர் சற்றே அதிர்ச்சியடைந்து அந்த அலுவலரை எச்சரித்ததோடு நிர்வாக பொறியாளரை தன்னை வந்து சந்திக்கும்படி கூறினார்.)

விஸ்வநாதன் (பா.ம.க.விவசாய பிரிவு): லால்குடி பகுதியில் காட்டூர் உள்ளிட்ட கிராமங்களில் கூடுதல் நெல் கொள்முதல் நிலையங்களை திறக்க வேண்டும். மணப்பாறை மற்றும் லால்குடி தாலுகாக்களில் உள்ள ஏரிகள் மற்றும் குளங்களில் உள்ள கலிங்கு, குமிழிகளை சரி செய்து, தூர்வாரி கரைகளை பலப்படுத்தி தர வேண்டும்.கலெக்டர்: திருச்சி மாவட்டத்தில் ஏற்கனவே 29 இடங்களில் நேரடி கொள்முதல் நிலையங்கள் திறக்கப்பட்டுள்ளது. தேவைப்படும் இடங்களில் கூடுதல் கொள்முதல் நிலையங்கள் திறக்கப்படும்.

ராஜாசிதம்பரம் (தமிழக விவசாயிகள் சங்க மாநில செயலாளர்): விவசாயிகளின் நில ஆவணங்களில் கிராமக் கணக்கிற்கும், கம்ப்யூட்டர் பட்டாவிற்கும் நிறைய வேறுபாடுகளும், தவறுகளும் உள்ளது. இதை சரி செய்யும் அதிகாரத்தை தாசில்தாருக்கு அளித்து அப்பணிகளை விரைந்து முடிக்க வேண்டும். அதேபோன்று விவசாயிகளின் நிலங்கள் அவர்களுக்கு தெரியாமலேயே மோசடி செய்யப்படுகிறது. கூட்டுப்பட்டாக்கள் சம்பந்தப்பட்டவர்கள் இல்லாமலேயே பதிவு செய்யப்படுகிறது. இதை தடுக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். தேசிய வேளாண் அபிவிருத்தி திட்டத்தில் உள்ள நிதிகளின் கீழ் விவசாயிகளுக்கு தேவையான பணிகளை செய்ய நிதி உதவி செய்ய வேண்டும். நாகலாபுரத்தில் ஏதாவது ஒரு வங்கி கிளையை தொடங்க வேண்டும். கரும்பு ஒரு டன்னுக்கு ரூ.2 ஆயிரத்து 500 விலையை தமிழக அரசு அறிவிக்க வேண்டும். நகைக் கடனுக்கு 7 சதவீத வட்டி மட்டுமே வசூலிக்க வேண்டும். காரீப்பருவம், ராபி பருவம் என பாகுபாடு படுத்தாமல் பயிர்க்கடன் வாங்கிய தேதியிலிருந்து ஓராண்டுக்கு 7 சதவீத வட்டியில் கடன் வழங்க வேண்டும். பயிர்க்கடன் பெற்றவர்களுக்கும் வட்டியில்லாமல் நகைக்கடன் வழங்க வேண்டும். தானியக்கடன் திட்டத்தில் மோசடி செய்த வங்கிச் செயலாளர்களை உடனடியாக கண்டறிந்து அவர்கள் நடவடிக்கை எடுக்க வேண்டும். நத்தம் புறம்போக்கில் குடியிருப்பவர்களுக்கு பட்டா போட்டுத்தர ஊராட்சி தலைவர்கள் பணம் கேட்கின்றனர். அதை தடுத்து நிறுத்த வேண்டும்.

கலெக்டர்: நத்தம் புறம்போக்கில் இருப்பவர்கள் பட்டா பெற யாருக்கும் பணம் தர வேண்டியதில்லை. தீர்மானமும் பெற வேண்டியதில்லை. நிலமோசடியில் பாதிக்கப்படுபவர்களும், ஈடுபடுபவர்களும் பெரிய ஆட்களாக இருப்பதால் அதுகுறித்த புகார்களை சிரமம் பார்க்காமல் என்னிடம் அளிக்க வேண்டும்.

மாசிலாமணி (தமிழ்நாடு விவசாயிகள் சங்க மாவட்ட செயலாளர்): உர விலையை 10 சதவீதம் உயர்த்த மத்திய அரசு முடிவு செய்திருப்பது கண்டனத்திற்குரியது. இந்த விலை உயர்வை விவசாயிகள் ஏற்றுக் கொள்ளவில்லை. இதை மத்திய, மாநில அரசுகளுக்கு கலெக்டர் தெரியப்படுத்த வேண்டும். முக்கொம்பில் இருந்து பிரியும் புதுவாத்தலை வாய்க்காலின் கொறம்புக்கட்டை பழுதடைந்து சுவர் இடிந்து பாசனத்திற்கு தண்ணீர் வருவது தடைபடுகிறது. இதனால் விவசாயிகளுக்கு பாதிப்பு ஏற்படுகிறது. எனவே, இந்த பாசன வாய்க்காலின் சுவரை உடனடியாக கட்டித்தர வேண்டும்.ஆற்று பாதுகாப்பு கோட்ட அலுவலர்: தற்போது தான் தண்ணீர் நிறுத்தப்பட்டுள்ளது. விரைவில் இப்பணி மேற்கொள்ளப்பட்டு சுவர் கட்டித்தரப்படும்.

அயிலை சிவசூரியன் (தமிழ்நாடு விவசாயிகள் சங்க மாவட்ட செயலாளர்): மத்திய அரசின் உர விலை உயர்வு முடிவை வன்மையாக கண்டிக்கிறோம். ஏற்கனவே பொட்டாஷ், டிஏபியை வெளிநாடுகளில் இருந்து இறக்குமதி செய்து வரும் வேளையில் இந்த விலை உயர்வும் வந்தால் அவற்றின் விலையும் மேலும் அதிகரிக்கும். இந்த விலை உயர்வு விவசாயத்தையும், விவசாயிகளையும் கடுமையாக பாதிக்கும். எனவே, மத்திய அரசு இந்த உர விலை உயர்வு முடிவை கைவிட வேண்டும். பருவநிலை மாற்றங்கள் குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்த வேண்டும். நேரடி நெல் கொள்முதல் நிலையங்களில் தையல்கூலி, இறக்கு கூலி என்று விவசாயிகளிடம் ரூ.10 வசூல் செய்கின்றனர். இதை தடுக்க வேண்டும்.

கலெக்டர்: பருவநிலை மாற்றம் குறித்து விவசாயிகளுக்கு எந்த வகையில் முகாம்கள் நடத்த வேண்டும் என்று விவசாயிகள் தெரிவிக்க வேண்டும். நேரடி கொள்முதல் நிலையங்களில் பணம் கண்டிப்பாக வசூலிக்கக் கூடாது. இதுதொடர்பாக நுகர்பொருள் வாணிபக்கழக அதிகாரிகளும், கண்காணிப்பு குழுவினரும் அவ்வப்போது ஆய்வு நடத்தி நடவடிக்கை எடுக்கப்படும் என்றார்.

### செம்மை நெல் சாகுபடி முறையில்கூடுதல் மகசூலுக்கு ஆலோசனை

செய்யாறு:செம்மை நெல் சாகுபடியில் கூடுதல் மகசூல் எடுக்க வேளாண் துறை ஆலோசனை தெரிவித்துள்ளது.இம்முறையில் சாகுபடி செய்ய வேளாண் துறையின் ஒருங்கிணைந்த தானிய உற்பத்தி திட்டம், தேசிய வேளாண்மை வளர்ச்சி திட்டம், ஆத்மா போன்ற திட்டங்கள் மூலம் மானியம் வழங்கப்படுகிறது. மானியமாக நெல்விதை, உயிர் உரங்கள், நுண்ணூட்ட கலவைகளை எடுக்க உருள்களை கரவி, நடவு செய்ய நடவு குறியீடு கருவி, விதை நேர்த்தி மருந்துகள் மற்றும் காம்பளக்ஸ் உரம், டிஏபி உரமும் வழங்கப்படுகிறது. செய்யாறு வட்டத்தில் 250 ஏக்கரில் இத்திட்டம் செயல்படுத்தப்பட்டுள்ளது.இம்முறையில் பயிர் செய்வதால் ஏக்கருக்கு ஆகும் செலவில் ரூ.5 ஆயிரம் வரை குறைகிறது. ஏக்கருக்கு 7 மெ.டன் நெல் கிடைக்கும். இம்முறை சாகுபடியின் முக்கிய அம்சங்களாக ஏக்கருக்கு 3 கிலோ விதை போதுமானது, நாற்றங்கால் பரப்பு ஒரு சென்ட, நாற்றின் வயது 14 நாட்கள், நடவு செய்யும் இடைவெளி முக்கால் அடிக்கு முக்கால் அடி, நடவு முறை ஒரு குத்துக்கு ஒரு நாற்று சதுர நடவுமுறை, நீர் மேலாண்மை காய்ச்சலும் பாய்ச்சலும் 2.5 செ.மீ., நீர்கட்டிய பன் உலரும் நிலையில் மறுநீர் கட்டுதல், களை மேலாண்மை உருள்களை கருவி மூலம் (கோனோ வீடர்) களைகளை அமுக்கி, சேற்றை கலக்கி விடுதல், உர நிர்வாகம் மண் ஆய்வு அடிப்படையிலும் இலை வண்ண அட்டை மூலமும் தேவையறிந்து உரம் இடுதல் இவ்வாறு சாகுபடி செய்வதால் செடிக்கு செடி அதிக தூர்களும், கதிரும் பிடித்து 7 மெ.டன்னுக்கு குறையாமல் மகசூல் கிடைக்கும்.இவ்வாறு செய்யாறு வேளாண் உதவி இயக்குனர் சாந்தி தெரிவித்தார்.

### அவிநாசியில் ரூ.17 லட்சத்தில் பூச்சி மருந்து தெளிப்பு : மாவுப்பூச்சியை கட்டுப்படுத்த நடவடிக்கை

திருப்பூர் : அவிநாசி பகுதிகளில் பல்வேறு பயிர் களிலும் ஏற்பட்டுள்ள பப்பாளி மாவுப்பூச்சி தாக்குதலைக் கட்டுப்படுத்த, பூச்சி மருந்து தெளிப்புப் பணியில் வேளாண் துறை ஈடுபட்டுள்ளது. இதற்காக, வட்டார வேளாண் உதவி இயக்குனர் அலுவலகத்தில், 17 லட்சம் ரூபாய் மதிப்புள்ள பூச்சி மருந்துகள் இருப்பு வைக்கப்பட்டுள்ளன.
பப்பாளி மரங்களில் இருந்து வடித்தெடுக்கப்படும் பாலுக்காக, பப்பாளி சாகுபடி அதிகளவு மேற்கொள்ளப்பட்டு வந்தது. இதற்காக, வெளிநாடுகளில் இருந்து பப்பாளி விதைகள் இறக்குமதி செய்யப்பட்டன. ஆனால், கடந்த இரண்டு ஆண்டுகளில் பப்பாளியில் மாவுப்பூச்சி தாக்குதல் ஏற்பட்டு, பப்பாளி மரங்களை நாசமாக்கியது.
இதனால், விவசாயிகள் வேறு வழியின்றி பப்பாளி மரங்களை வெட்டிச்சாய்த்தனர். தற்போது, ஏக்கர் கணக்கில் பப்பாளி சாகுபடி செய்வது நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது. இந்த மாவுப்பூச்சி தாக்குதல், பப்பாளி மரங்களில் இருந்து மற்ற சாகுபடி பயிர்கள் உட்பட அனைத்து விதமான செடிகளுக்கும் பரவியது. பார்த்தீனிய செடிகளைக்கூட, இந்த மாவுப்பூச்சிகள் விட்டு வைக்கவில்லை.கடந்த ஆண்டில் மரவள்ளி சாகுபடி செய்த விவசாயிகள், மாவுப்பூச்சி தாக்குதலால் பெரும் பாதிப்புக்கு உள்ளாயினர். கொய்யா உள்ளிட்ட அனைத்து செடிகளுக்கும் மாவுப்பூச்சி தாக்குதல் பரவியது. குறிப்பாக, அவிநாசி பகுதி விவசாயிகள் பெருமளவு பாதிக்கப்பட்டனர். வெயில் காலங்களில் மட்டும் மாவுப்பூச்சிகள் அதிகளவு இனப்பெருக்கமாகி, அவற்றின் பரவும் தன்மை தீவிரமடையும்; மழை மற்றும் குளிர்காலங்களில் பரவாது. எனவே, அடுத்த பருவமழை வரை, மாவுப்பூச்சி பரவாமல் தடுக்க வேளாண் துறை நடவடிக்கை எடுத்து வருகிறது. அவிநாசி வட்டார வேளாண் மையம் சார்பில் பூச்சி மருந்துகள் தெளிக்கப்பட்டு வருகின்றன.அவிநாசி வட்டார வேளாண் உதவி இயக்குனர் சந்திரசேகரன் வெளியிட்டுள்ள அறிக்கை:அவிநாசி பகுதியில் பப்பாளி மாவுப்பூச்சி என்ற சாறு உறிஞ்சும் பூச்சி தாக்குதலை கட்டுப்படுத்த, பூச்சி மருந்து தெளிப்பு பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. முதல்கட்டமாக,

கானூர் மற்றும் தண்டுக்காரன்பாளையம் கிராமங்களில், "அசாரடிக்டின் ஒரு சதம்' மருந்து தெளிப்பு துவங்கியுள்ளது. வேளாண் இணை இயக்குனர் சங்கரராஜ், சின்னக்கானூர் கிராமத்தில் மருந்து தெளிப்பு பணியை துவக்கி வைத்தார்.விவசாயிகளின் ஒத்துழைப்புடன் பாதிப்புள்ள இடங்களில் மருந்து தெளிக்கும் பணி நடக்கிறது. இரண்டாம் கட்டமாக, "ப்ரொபினோபாஸ் 50 சதம்' மருந்து தெளிக்கும் பணி, மார்ச் 2 முதல் மேற்கொள்ளப்படும். மாவுப்பூச்சியை கட்டுப்படுத்த 17 லட்சம் ரூபாய் மதிப்புள்ள பூச்சி மருந்துகள், அவிநாசி வேளாண் விரிவாக்க மையத்தில் இருப்பு வைக்கப்பட்டுள்ளன. இவ்வாறு, அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## ரூ.1,905 கோடி பயிர்க்கடன் : கூட்டுறவு துறை சாதனை

பிப்ரவரி 20,2010,00:00 IST

சென்னை: நடப்பாண்டில் ரூ.2,000 கோடி அளவுக்கு பயிர்க்கடன் வழங்க குறியீடு நிர்ணயிக்கப்பட்டதில், இம்மாதம் 15ம் தேதி வரை, 1,905 கோடியே 82 லட்சம் ரூபாய் அளவுக்கு பயிர்க்கடன் வழங்கப்பட்டுள்ளது. கூட்டுறவுத் துறை அமைச்சர் கோ.சி.மணி தலைமையில், நடப்பாண்டில் கூட்டுறவுத் துறையின் செயல்பாடு குறித்த ஆய்வுக் கூட்டம் நடந்தது. நடப்பாண்டில் ரூ.2,000 கோடி அளவுக்கு பயிர்க்கடன் வழங்க குறியீடு நிர்ணயிக்கப்பட்டதில், இம்மாதம் 15ம் தேதி வரை, 1,905 கோடியே 82 லட்சம் ரூபாய் அளவுக்கு ஏழு லட்சத்து 83 ஆயிரத்து 988 பயனாளிகளுக்கு பயிர்க்கடன் வழங்கப்பட்டுள்ளதாக, இதில் தெரிவிக்கப்பட்டது.  இதுவரை கடன் பெறாத இரண்டு லட்சத்து 38 ஆயிரத்து 927 புதிய விவசாயிகளுக்கு, 571 கோடியே 51 லட்சம் ரூபாய் அளவுக்கு பயிர்க்கடன் வழங்கப்பட்டுள்ளது. அதேபோல, நடப்பு ஆண்டில் 10 ஆயிரம் புதிய விவசாயிகள் கூட்டுப் பொறுப்புக் குழுக்கள் அமைக்க திட்டமிடப்பட்டதில், 11 ஆயிரத்து 759 பொறுப்புக் குழுக்கள் அமைக்கப்பட்டு, 145 கோடியே 26 லட்சம் ரூபாய் அளவுக்கு பயிர்க்கடன் வழங்கப்பட்டுள்ளதாக கூட்டத்தில் தெரிவிக்கப்பட்டது. இக்கூட்டத்தில், கூட்டுறவுச் சங்கங்கள் மற்றும் வங்கிகளில் அவ்வப்போது ஏற்படும் காலிப் பணியிடங்களை நிரப்ப நடவடிக்கை எடுக்குமாறு அமைச்சர் தெரிவித்தார். கூட்டத்தில், கூட்டுறவு மற்றும் உணவுத் துறை முதன்மைச் செயலர் சண்முகம், கூட்டுறவு சங்கங்களின் பதிவாளர் யதீந்திரநாத் ஸ்வேன், கூடுதல் பதிவாளர்கள் மற்றும் உயரதிகாரிகள் கலந்து கொண்டனர்.

தினத் தந்தி DAILY THANTHI வெல்க தமிழ்

## *மரபணு மாற்ற உணவு பொருட்களை விமர்சித்தால் ஜெயில் தண்டனை மத்திய அரசு பரிசீலனை*

*புதுடெல்லி, பிப்.20–*

*மரபணு மாற்றம் செய்யப்பட்ட உணவு மற்றும் மருந்து பொருட்களுக்கு எதிராக விமர்சித்தால், ஜெயில் தண்டனை விதிக்கும் சட்டம் இயற்றுவது குறித்து மத்திய அரசு பரிசீலித்து வருகிறது.*

*மரபணு மாற்ற பொருட்கள்*

*உயிரி தொழில் நுட்ப முறையில் விவசாய பயிர்கள் மற்றும் தடுப்பூசிகள் போன்ற நவீன மருத்துவ சிகிச்சை முறைகள் அறிமுகப்படுத்தப்பட்டு வருகின்றன. குறிப்பாக, மரபணு மாற்றம் செய்யப்பட்ட பி.டி.கத்தரிக்காய் போன்ற விவசாய பயிர்கள் பாதுகாப்பானது அல்ல என்று, கடும் எதிர்ப்பு தெரிவிக்கப்பட்டு வருகிறது.*

*நாடு முழுவதும் எழுந்த எதிர்ப்பை தொடர்ந்து பி.டி.கத்தரிக்காயை, வர்த்தகரீதியாக பயிரிடுவதற்கு தற்காலிக தடை விதித்து மத்திய அரசு சமீபத்தில் உத்தரவிட்டது. இந்த நிலையில், மரபணு மாற்ற பொருட்களை தீவிரமாக அறிமுகப்படுத்த மத்திய அரசின் அறிவியல் தொழில் நுட்ப துறை அமைச்சகம் நடவடிக்கை மேற்கொண்டு வருகிறது.*

*ஜெயில் தண்டனை*

*அந்த அமைச்சகத்தின் ஒரு பிரிவான உயிரி தொழில்நுட்ப துறை, இந்த பொருட்களுக்கு எதிரான விமர்சனம் மற்றும் போராட்டங்களை தடுப்பதற்கான சட்டத்தை கொண்டு வருவது பற்றி பரிசீலித்து வருகிறது.*

*இந்த உத்தேச சட்டத்தினபடி, உரிய ஆதாரங்கள் அறிவியல் ரீதியான ஆவணங்கள் இன்றி இத்தகைய பொருட்களின் பாதுகாப்பு பற்றி விமர்சித்தால், அவர்களுக்கு குறைந்த பட்சம் 6 மாதம் முதல் 1 ஆண்டு ஜெயில் தண்டனையுடன்,*

ரூ.2 லட்சம் வரை அபராதமும் விதிக்க முடியும்.
போராட்டம் நடத்த முடியாது
மேலும், உயிரி தொழில் நுட்ப கட்டுப்பாடு ஆணையத்தின் முன்பாக, கண்டன ஆர்ப்பாட்டங்கள் அல்லது ஊர்வலங்களும் நடத்த முடியாது. இந்த துறை சம்பந்தப்பட்ட அதிகாரிகள் வருகை தரும்போதும் இதுபோன்ற போராட்டங்கள் நடத்த முடியாது. மீறி போராட்டம் நடத்துகிறவர்கள் மீது வழக்கு தொடரப்பட்டு 3 மாதம் ஜெயில் தண்டனையுடன் ரூ.5 லட்சம் வரை அபராதமும் விதிக்க முடியும்.
இந்த துறையின் சார்பில் தயாரிக்கப்பட்டு வரும் '2009-ம் ஆண்டு இந்திய உயிரி தொழில்நுட்ப கட்டுப்பாட்டு ஆணைய (பி ஆர் ஏ ஐ) மசோதா'வில், இந்த தண்டனைக்கான விதிமுறைகள் இடம் பெற்றுள்ளன. இந்த மசோதா சட்டமாக நிறைவேற்றப்பட்டு அமல்படுத்தப்படும்போது, மரபணு மாற்ற பொருட்கள் பற்றி யாரும் விமர்சிக்கவோ அல்லது போராட்டங்களோ நடத்த முடியாது என்பது குறிப்பிடத்தக்கது.இந்த சட்ட மசோதா, கொடுங்கோன்மையானது என்றும், அரசியல் சட்டப்படி வழங்கப்பட்டுள்ள அடிப்படை உரிமையான பேச்சு மற்றும் எழுத்து சுதந்திரத்துக்கு வாய்ப்பூட்டு போட்டுவிடும் என்றும், சட்ட வல்லுனர்கள் கடும் கண்டனம் தெரிவித்து உள்ளனர்.

## உற்பத்தி குறைவு, தேவைப்பாடு அதிகரிப்பால் சர்க்கரை இறக்குமதி செய்ய குளிர்பான நிறுவனங்கள் முடிவு

இக்கனாமிக் டைம்ஸ் செய்தி பிரிவு
புதுடெல்லி
கடந்த 30 ஆண்டுகளில் இல்லாத அளவிற்கு, சர்வதேச அளவில் சர்க்கரை விலை மிகவும் அதிகரித்துள்ளது. உள்நாட்டில், தேவையை விட, அளிப்பு குறைவாக உள்ளதால், கடந்த ஒரு சில மாதங்களாக இதன் விலை கடுமையாக உயர்ந்து வருகிறது. இது, நுகர்வோருக்கு மட்டுமின்றி, குளிர்பானங்கள், இனிப்பு வகைகள், சாக்லெட்டுகள் மற்றும் பிஸ்கெட்டுகள் தயாரிப்பில் ஈடுபட்டு வரும் நிறுவனங்களுக்கும் அதிக பாதிப்பை ஏற்படுத்தி உள்ளது.
செலவினம்
குளிர்பான நிறுவனங்களின் மொத்த செலவினத்தில், சர்க்கரைக்கான செலவினம் 25 சதவீத அளவிற்கு உள்ளது. இந்த நிலையில், குளிர்பானங்கள் தயாரிப்பு மற்றும் விற்பனையில் முன்னணியில் உள்ள கோககோலா மற்றும் பெப்சி ஆகிய நிறுவனங்களுக்கும் இது அதிக இடையூறாக உள்ளது.
பொதுவாக கோடை பருவத்தில், குளிர்பானங்களுக்கான தேவைப்பாடு அதிகரிக்கும். இந்த நிலையில், சர்க்கரை விலை உயர்வால் இந்நிறுவனங்களின் லாப வரம்பு பாதிப்புக்குள்ளாகும். இதனை கருத்தில் கொண்டு, குளிர்பான தயாரிப்பு நிறுவனங்கள், அதிக விலை கொடுத்து, சர்வதேச சந்தைகளில் இருந்து சர்க்கரையை இறக்குமதி செய்ய திட்டமிட்டுள்ளன.
இந்தியா – சீனா
மகாராஷ்டிராவில், மொத்த விலை சந்தையில், ஒரு கிலோ சர்க்கரை விலை ரூ.34 என்ற அளவில் உள்ளது. அதேசமயம், வெளிநாடுகளில் இருந்து இறக்குமதி செய்யப்படும் சர்க்கரைக்கு ரூ.40 விலை கொடுக்க நிறுவனங்கள் தயாராகி உள்ளன. இதனால், சாக்லெட், பிஸ்கெட் மற்றும் குளிர்பான தயாரிப்பு நிறுவனங்களின் லாப வரம்பு மிகவும் பாதிப்புக்குள்ளாகும் என்பதுடன், ஒரு சில நிறுவனங்கள் இழப்பையும் சந்திக்க நேரிடும் என்ற நிலைப்பாடு உள்ளது.
சர்வதேச அளவில், இந்தியா மற்றும் சீனா ஆகிய இரு நாடுகளில்தான் குளிர்பானங்கள் விற்பனை மிகவும் அமோகமாக உள்ளது இதனால், பல பன்னாட்டு நிறுவனங்கள், இந்தியாவில் செயல்படும் அவற்றின் துணை நிறுவனங்களின் விற்பனையை அதிகரிக்கும் வகையில் இலக்கு நிர்ணயித்துள்ளன. ஆனால், உள்நாட்டில் செயல்படும், பன்னாட்டு நிறுவனங்களின் துணை நிறுவனங்கள், சர்க்கரை விலை உயர்வால் இந்த இலக்கை எட்ட முடியாத நிலையில் உள்ளன என சந்தை ஆய்வாளர் ஒருவர் குறிப்பிட்டார்.
இருப்பினும், ஒரு சில குளிர்பான நிறுவனங்களும், பிஸ்கெட், சாக்லெட் தயாரிப்பு நிறுவனங்களும் பொருள்களின் அளவை குறைத்து, விலையை உயர்த்தவும் திட்டமிட்டுள்ளன. குளிர்பான நிறுவனங்கள், 200 மிலி கண்ணாடி பாட்டில்களிலும், 600 மிலி மற்றும் 2 லிட்டர் பெட் பாட்டில்களிலும் விற்பனை செய்யப்படும் குளிர்பானங்களால் இழப்பு ஏற்படும் என கூறி வருகின்றன.
முக்கிய மூலப்பொருள்
இது குறித்து கோககோலா நிறுவனத்தின் உயர் அதிகாரி ஒருவர் கூறும்போது, "குளிர்பானங்கள் தயாரிப்பிற்கு சர்க்கரை முக்கிய மூலப் பொருளாக உள்ளது. இச்சூழ்நிலையில், உள்நாட்டில் தேவையை விட, அளிப்பு குறைவாக உள்ளதால், குளிர்பானங்கள் மற்றும் பிஸ்கெட் தயாரிப்பு நிறுவனங்கள் 10 நாள்களுக்கு தேவையான சர்க்கரையை மட்டுமே இருப்பு வைத்துக் கொள்ள வேண்டும் என அரசு நிபந்தனை விதித்துள்ளது. ஆனால், இறக்குமதி செய்யப்படும் சர்க்கரைக்கான இருப்பிற்கு தடை விதிக்கவில்லை. இதனை கருத்தில் கொண்டே, இத்துறை நிறுவனங்கள் அதிக விலை கொடுத்து சர்க்கரையை இறக்குமதி செய்து கொள்ள முடிவு செய்துள்ளன" என்று

தெரிவித்தார்.
*சென்ற 2009–ஆம் ஆண்டில், பெப்சிகோ நிறுவனத்தின் சர்வதேச வர்த்தகத்தில், இந்தியாவின் பங்களிப்பு 32 சதவீதமாக இருந்தது. இதர ஆசிய நாடுகள், மத்திய கிழக்கு மற்றும் ஆப்பிரிக்க நாடுகளை விட இந்தியாவில்தான் குளிர்பானங்கள் விற்பனை மிகவும் அதிகமாக உள்ளது. குறிப்பாக, சென்ற அக்டோபர்–டிசம்பர் காலாண்டில் கூட, இந்தியாவில் குளிர்பானங்கள் விற்பனை 21 சதவீத அளவிற்கு இருந்தது.*
கோககோலா
*கோககோலா நிறுவனமும் இந்தியாவில், குளிர்பானங்கள் விற்பனையில் அதிக பங்களிப்பை கொண்டுள்ளது. சென்ற அக்டோபர் – டிசம்பர் காலாண்டில், இந்நிறுவனத்தின் விற்பனை அளவின் அடிப்படையில் 20 சதவீத பங்களிப்பை கொண்டிருந்தது.*
*பெப்சிகோ மற்றும் கோககோலா ஆகிய நிறுவனங்கள், எதிர் வரும் கோடை பருவத்தில் அவற்றின் குளிர்பானங்களின் விலையை 20 சதவீத அளவிற்கு உயர்த்தும் என எதிர்பார்க்கப்படுகிறது. கோககோலா நிறுவனம் 300 மிலி மற்றும் 2 லிட்டர் பெட் பாட்டில் குளிர்பானங்களின் விலையை 9 சதவீதம் முதல் 20 சதவீதம் வரை அதிகரித்துள்ளது.*
*இதேபோன்று பெப்சிகோ நிறுவனம், அனைத்து பிராண்டுகளிலும் 200 மிலி, 300 மிலி மற்றும் 600 மிலி பெட்பாட்டில் குளிர்பானங்களின் விலையை ரூ.2 உயர்த்தி உள்ளது. அதேசமயம், கண்ணாடி பாட்டில்களில் விற்பனை செய்யப்படும் குளிர்பானங்களின் விலையை கடந்த 2001–02–ஆம் ஆண்டிலிருந்து உயர்த்தவில்லை என்று கூறியுள்ளது. எனினும், பெட் பாட்டில்களில் அடைக்கப்பட்ட குளிர்பானங்களின் விலையை சந்தை நிலவரத்திற்கேற்ப உயர்த்தி அல்லது குறைத்து விற்பனை செய்து வருகிறது.*